இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (31.10.2025) பெரம்பூர், மேட்டுப்பாளையம் பூலோகமாத்தம்மன் திருக்கோயில் திருப்பணி தொடக்க விழா நிகழ்வில் கலந்து கொண்டு, திருப்பணிகளை தொடங்கி வைத்தார். உடன் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அமைச்சர் த.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. கிளை இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

திருமுடிவாக்கம் ஏ.மணி தலைமை! பா.அறிவொளி வரவேற்புரை!

காஞ்சிபுரம், நவ.1

குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் மத்திய ஒன்றிய திமுக கிளைக் கழக இளைஞரணி மற்றும் புதிய பாக இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம் நாளை (02.10.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 3 மணி அளவில் இடம் மீனாட்சி திருமண மண்டபம் சோமங்கலத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு குன்றத்தூர் மத்திய ஒன்றிய கழகப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் ஏ.மணி தலைமை வகிக்கிறார்.

ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா. அறிவொளி வரவேற்புரை யாற்றுகிறார்.

மா.சே.பிரகாஷ், பொன் இளைய பாரதி, க பா.ஆடலரசு, ரா.தீபக், எஸ்.சுதாகர் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இக்கூட்டத்தில் ஆலோசனை வழங்கி மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்.

இதில் தொகுதி இளைஞரணி தேர்தல் மேற்பார்வையாளர் ஆர்.டி.மதன்குமார், படப்பை ஆ. மனோகரன், கே.ஜி. பாஸ்கர் சுந்தரம், சரஸ்வதி மனோகரன், கோல்டு பிரகாஷ், பா.ராமமூர்த்தி, பொறுப்புக்குழு உறுப்பினர்கள் மு. சுப்பிரமணி, க.ஏழுமலை, மு.செல்வமணி, வாசுகி மகேஷ், வே.ஹரி, மா.பரிமேலழகன், கே.எம்.சி. சத்தியமூர்த்தி, இ விஸ்வநாதன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில் குன்றத்தூர் மத்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், புதிதாக நியமிக்கப்பட்ட கிளைக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள், பாக இளைஞரணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் அவசியம் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். பொருள்: நவம்பர் 27 இளைய தலைவர் பிறந்த நாள் விழா, 2026 சட்டமன்றத் தேர்தல் கழக வளர்ச்சி.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில், ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் எதிரில் அமைக்கப்படவுள்ள "ஆலந்தூர் – ஆசர்கான பேருந்து நிறுத்த பயணியர் நிழற்குடை கட்டுமானப் பணிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அடிக்கல் நாட்டினார். அருகில் மண்டலக் குழுத் தலைவர் என்.சந்திரன், ஆலந்தூர் வடக்கு பகுதி செயலாளர் ப. குணாளன், நகரச் செயலாளர் டி. பாபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி. பிரகாஷ், வட்டச் செயலாளர் கே.பி.முரளி கிருஷ்ணன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ்நாட்டு மக்களை கண் இமயம் போல் காக்கும்

ஒரே தலைவர் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின்தான்!

திருநின்றவூரில்– உங்களுடன் ஸ்டாலின் முகாமில் - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர் நவ 01;-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட திருநின்றவூர் நகராட்சி 16,17, ஆகிய வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது தமிழ் நாடு சிறுபான்மை நலன் மற் றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு முகாமினை துவக்கி வைத்து

உடனடியாக தீர்வு காணப் பட்ட மனுக்களுக்கான அரசாணையினை பயனாளிகளுக்கு வழங்கினார்.

அப்போது பேசிய அமைச்சர் அரசு சேவைகளை பொது மக்களுக்கு மிகவிரைவாகவும் எளிதாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் கொண்டு சேர்ப்பதற்காக "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அற்புதமான திட்டத்தை தொடங்கி வைத்தார் இதில் ஆதார் கார்டு புதுப்பித்தல் சாதி சான்று பெற, பட்டா மாற்றம் செய்ய, பென்சன் வாங்க, மகளிர் உரி மைத் தொகை திட்டத்தில் தகுதி வாய்ந்த விடுபட்ட மகளிர் பயன் பெற, மருத்துவ காப்பீட்டு அட்டை பெற, ஆதார் அட்டையில் திருத்தங்கள் செய்ய, ரேசன் அட்டையில் முகவரி திருத்தம் செய்ய" போன்ற பல கோரிக்கைகளுக்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி அலுவலர்கள் நேரடியாக உங்கள் இருப்பி டங்களுக்கு அருகிலேயே வந்து தீர்வுகளை வழங்கப் பட்டு வருகிறது இது போன்ற எண்ணற்ற திட்டங்களை பொதுமக்கள் பயன்பெறு வகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து அதனை சிறப்பான முறையில் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்.

இது போன்ற திட்டங்களை இந்தியாவில் உள்ள முதல மைச்சர்கள் பொறாமைப்படும் அளவிற்கு பெருமைப்படும் அளவிற்குக் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் தமிழ் நாட்டு மக்களை கண் இமயம் போல் காக்கும் ஒரே தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தான் என அமைச்சர் தெரிவித்தார் இதில் நகராட்சி மன்ற தலைவர் உஷாராணி ரவி நகராட்சி ஆணையர் ஜீவிதா , திருநின்றியூர் நகர செயலாளர் தி. வை.இரவி, நகராட்சி பொறியாளர் குமார் , மாநில சிறுபான்மையினர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, நிர்வாகிகள் அன்பழகன், எஸ்.கமலக் கண்ணன், நாகராஜ், பாபு, குணசேகரன், பி.எல்.ஆர். யோகா, மேகா நதன், பிரகாஷ், மைதிலி கோகுல், ஸ்ரீதேவி, கோட்டீஸ்வரன், அசோக்குமார், தங்கராஜ், சரவணன், சலீம், மோகன கிருஷ்ணன், மு.பெ.மகேஷ் குமார், முரளி, செந்தில் குமார், ரவிச்சந்திரன், சுகுமார், பாபு, பூமணி, சந்தோஷ், ஜெயக்குமார், ஜெயக்குமார், சுதர்சனம், பட்டாணி கார்த்திக், பிரசன்னா, வீ.மகேஷ்குமார், தெய்வசிகாமணி, ஆறுமுக ராஜா, உள்பட அரசுத் துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கலாநிதி வீராசாமி எம்.பி. – கன்னிகை ஜி.ஸ்டாலின் பங்கேற்பு!

பெரம்பூர் தெற்கு பகுதி சார்பில் வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரை - பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் அறிவிப்பு!

சென்னை, நவ.1-

முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி SIR வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த ஆலோசனைக் கூட்டம் நாளை (02.11.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.00 மணி அளவில் 44 வட்டம் பழனி ஆண்டவர் கோவில் தெரு, பெருந்தலைவர் காமராஜர் திருமண மண்டபத்தில் எனது (பகுதி செயலாளர் க. ஜெயராமன்) தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, பெரம்பூர் தொகுதி தேர்தல் பார்வையாளர் கன்னிகை ஜி.ஸ்டாலின், இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், வி. தயாளன் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் பெரம்பூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், BLA2, BDA, BYA, வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு பகுதிச் செயலாளர் க.ஜெயராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

பல்லாவரம் சட்டமன்ற தொகுதி பல்லாவரம் மறைமலை அடிகளார் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் ரூபாய் 54 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணிகளை இ. கருணாநிதி எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மாவட்ட கல்வி அலுவலர் தலைமை ஆசிரியர் தனியார் நிறுவன நிர்வாகிகள் ஆசிரியர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் பள்ளி மேலாண்மை குழு நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

"அன்னம் தரும் அமுதகரம்" 254 வது நாள்!

திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,நவ.1-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 254 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (31.10.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71அ, அருந்ததி நகர், பெரம்பூர். 2) வட்டம் 74, ராஜீவ் காந்தி நகர், பெரம்பூர் சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்பி.கே. சேகர்பாபு தமிழ்நாட்டு

நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா. ராஜ்முகமது,

திரு.வி.க. நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ் பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். தமிம், பொல்லு டி.சுரேஷ் குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், எல். சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.